1978 மார்ச் 31]

உப்பனாற்றின் குறுக்கே பாலம்.

*746 வினா—திரு. ப. பொன்னுரங்கம்; மாண்புமிகு போக்கு வரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென்னாற்காடு மாவட்டம், கடலூர் துறைமுகத்தில் ஸ்டேட் பேங்குக்கும் சிங்காரத்தோப்புக்கும் இடையே உப்பனாற்றை கடப்பதற்கு முந்தைய அரசால் ஒரு பாலம் அமைத்திட திட்டம் ஏதேனும் ஆய்வு செய்யப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பாலம் அமைக்கும் வேலை இப்போது எந்த அளவில் உள்ளது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) ஆம்.

(ஆ) கடலூர் துறைமுகப் பகுதியில் இப்பாலம் அமைக்க விருப்பதால், துறைமுகத்துறையின் ஒப்புதலைப் பெற நெடுஞ் சாலைத்துறை தலைமைப் பொறியாளர் தக்க நடவடிக்கை எடுத் துள்ளார். ஒப்புதல் கிடைத்ததும் வேலை ஆரம்பிக்கப்படும்.

திரு. ப. பொன்னுரங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1975-லே துறைமுக அதிகாரிகளும், மின்வள அதிகாரிகளும் ஒப்புதல் அளித்து 13,50,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தப் பாலத்தை ஸ்டேட் பாங்குக்கு எதிரில் கட்டினால் தான் வசதியாக இருக்கும் என்று அந்தப் பகுதி மக்கள் கருது கிறார்கள். காரணம், அந்தப் பாங்குக்குப் பக்கத்திலே பள்ளிக் கூடம், மருத்துவமனை, பஸ் ஸ்டாண்டு, மார்க்கெட் ஆகியவைகள் இருக்கின்றன. அந்த இடத்தை மாற்றுவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. இதைத் தடுத்து நிறுத்தி, மக்களுக்கு வசதியாக இருக்கும் அதே இடத்தில் கட்டுவதற்கு இந்த அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துறைமுகத் துறையினர் இப்பாலத்தை சுனாங்குப்பத்திலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத் தில் கட்டினால்தான் துறைமுகத்தைப் பொறுத்தவரை துறை முகப்பணிகள் பாதிக்கப்படாமல் நடவடிக்கை எடுக்க வாய்ப் பாக இருக்குமென்று கூறப்பட்டது. ஆனாலும் சுனாங்குப்பம் கடலூருக்குச் செல்ல அதிக தூரம் ஆகுமென்று கணிக்கப்பட்ட காரணத்தால் இப்பாலத்தை ஏற்கெனவே முடிவு செய்யப்பட்ட சிங்காரத் தோப்பு அருகில் கட்ட துறைமுகப் பகுதியினரின் ஒப்புதலை அரசு கேட்டு ஒப்புதல் கிடைத்ததும் அப்பணி மேற் கொள்ளப்படும்.